செய்தி வெளியீடு எண்: 418/2017 நாள்: 15.07.2017

**விவசாயிகள் அவர்களின் சொந்த வாகனங்கள் கொண்டுவந்து இலவசமாக வண்டல்மண் பெற்று பயனடைய ஒரு அரிய வாய்ப்பு!**

**மேலும் பொதுப்பணித்துறையின் இயந்திரங்களின் மூலம் விவசாயிகளின் வாகனங்களில் இலவசமாக வண்டல்மண் ஏற்றிவிடப்படும்!!**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன் இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு!!!**

தமிழகத்திலுள்ள நீர்நிலைகளை பாதுகாத்து அவற்றை மேம்படுத்தும் உயரிய நோக்கத்தோடு கடந்த 2016-17ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் குடிமராமத்து திட்டம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அந்தந்த பகுதிகளில் உள்ள விவசாய அமைப்புகளோடு இணைந்து அவர்களின் பங்களிப்போடு நீர்நிலைகளை புனரமைத்து, விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே அரசின் நோக்கமாகும். இத்திட்டத்தை 2017-2018ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் செயல்படுத்தும் விதமாக அரசாணை (நிலை) எண்.224/ பொதுப்பணி (W1)துறை/நாள் 09.06.2017ன் வாயிலாக ரு.331.68 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 63 ஏரிகளை புனரமைக்க ரு.11.679 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிகளின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. குடிமராமத்து பணிகள் அனைத்தும் விவசாய சங்கங்கள் (அல்லது) ஆயக்கட்டுதாரர்கள் மூலம் அவர்களின் பங்களிபுடன் நியமன முறையில் செயலாக்கபடவுள்ளது. இப்பணிக்கு பங்களிப்பாக மதிப்பிட்டு தொகையில் 10 சதவிதத்திற்கான மதிப்பிற்கு பணியாளர்கள் மூலமாக உழைப்பு (அல்லது) கட்டுமான பொருட்கள் (அல்லது) பண பங்களிப்பு இவற்றில் ஏதேனும் ஒரு வடிவத்தில் பெறப்படும்.

ஏரிகளில் புனரமைப்பு செய்யப்படவுள்ள பணிகள்:-

1) ஏரிக்கரை மற்றும் நீர்பரப்பு பகுதிகளில் காணப்படும் புதர்களை அகற்றுதல்.
2) ஏரிக்கரையில் அரிப்பினால் ஏற்பட்டுள்ள பள்ளங்களை நிரப்பி கரையினை பலப்படுத்துதல்
3) ஏரிகளில் நீர்வரத்து கால்வாய் தூர்வாருதல் மற்றும் அதில் காணப்படும் புதர்களை அகற்றுதல்.
4) எல்லைக்கற்கள் நடுதல்.
5) ஏரியில் உள்ள மதகுகள், கலங்கள் சீர்செய்தல்.
6) அகவுரை பணிகள் செய்தல்.

தற்சமயம் ஏரிகள் அமைந்துள்ள பகுதிகளை சார்ந்த பாசனதாரர் சங்கங்களின் பதவி காலம் முடிவடைந்துள்ளதால் அந்தந்த பகுதிகளில் ஏரி பாசன தாரர்கள் சங்கத்தை புதியதாக பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வெண்டும்.

மேற்காணும் ஏரிகளில் குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளும் சமயத்தில் பொதுப்பணித்துறையின் இயந்திரங்களின் மூலம் விவசாயிகளின் வாகனங்களில் இலவசமாக வண்டல்மண் ஏற்றிவிடப்படும். எனவே அந்தந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அவர்களின் சொந்த வாகனங்கள் கொண்டுவந்து இலவசமாக வண்டல்மண் பெற்று பயனடையமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

வெளியீடு:

15/7/17

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்-9.

15/7/17

DO /ONE PAGE NOTE